# தி.மு.க.வின் அரசியல் அலைகள் என்றும் ஓய்வதில்லை!

‘யானைக் குழியில் விழுந்தால் எறும்புகூட எட்டி உதைக்குமாம்’ என்றொரு பழமொழி உண்டு. கழகத் தலைவர் ஸ்டாலின் தமிழகத்தின் முதல்வராக இருந்த போது அவர் கடுமையாக உழைத்தார். தமிழ்ச் சமூகத்திலுள்ள அத்தனை பிரிவினருக்கும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். நிறுவனமாக இல்லாத ஒரு தனி மனிதனின் ‘அபிலாஷைகளை’ பூர்த்தி செய்யும் வண்ணம் கடந்த 2026 தேர்தலில் வாக்களித்து தமிழகத்தில் ஒரு தொங்கு சட்டமன்றத்தை வாக்காளர்கள் ஏற்படுத்திவிட்டனர். த.வெ.க.வுக்கு முழுமெஜாரிட்டியை மக்கள் வழங்கவில்லை.

தி.மு.க. மக்களால்துடைத்தெறியப்படவில்லை. அதன் அணி 73 இடங்களைப் பெற்று இருக்கிறது. அதற்குத்தனித்து 59 இடங்கள் மக்களால் வழங்கப்பட்டு இருக்கின்றன. வாக்கு சதவிகிதம் 31.39 பெற்று இருக்கிறது. ஆனால் நாளேடுகள் என்ன தலைப்புப் போடுகின்றன தெரியுமா?

‘த.வெ.க.வின் மாபெரும் சக்திமிக்க உடனடியான முன்னேற்றம் திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டன’ என்று ஆங்கில நாளேடு தலைப்பிடுகிறது.

‘திராவிட ஆட்சியைத் தகர்த்த விசில்’ என்று ‘வெல்க தமிழ்’ நாளேடு தலைப்பிடுகிறது. 60 ஆண்டுகள் தொடர்ச்சியை கையகப்படுத்தி விட்டார் என்று ஓர் ஏடு புளகாங்கிதம் அடைகிறது. திருத்திக்கொள்ளுங்கள் சென்னை இராஜதானியை சென்னை மாகாணத்தை சென்னை மாநிலத்தை தமிழ்நாட்டை திராவிட இயக்கம் 77 ஆண்டுகள் ஆட்சி செய்து இருக்கிறது.


ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம். வாக்களிப்பின் மூலம் வெற்றி பெறலாம். எப்பேர்ப்பட்ட மாபெரும் கொம்பன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் ‘எங்கள் வாசம்’ இல்லாமல் ஆட்சி ஆள முடியாது. எங்களைப் பூண்டோடுஅழிக்கவும்முடியாது. தகர்த்துவிடவும் முடியாது. அரசியலின் நெடிய பக்கங்களில் சில ‘விதூஷகன்’ நாடகங்கள் வெற்றி மாலை சூட்டிக் கொள்ளலாம். அதுவும் ஜனநாயக விதியானால் என்ன செய்ய முடியும்?

**கழகத் தலைவர் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார். தி.மு.க. எதையும் எதிர்கொள்ளும், கடந்து செல்லும், அதன் வரலாறு அப்படி. அக்கட்சி 114 ஆண்டு அரசியல் பாரம்பரியம் உள்ளது. தி.மு.க. நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல. திராவிட மக்களை – தமிழர்களை தென்னக மக்களைக் காப்பாற்ற வந்த வீட்டு விளக்கு தி.மு.க; காட்டுத் தீ அல்ல. அதுவும் இலுப்பை எண்ணெயில் எரியும் ‘பெரிய’ அகல் விளக்கு, நின்று எரியும். எளிதில் அணையாது.**

**நடந்து முடிந்த தேர்தலில் திடீர் தீ விபத்தால் ஏற்பட்ட ‘நாசம்’ போல தி.மு.க.வை மக்கள் தோற்கடித்து இருக்கிறார்கள். இது ஓர் ‘அரசியல் இடையூறு’ என்றுதான் சொல்லவேண்டும். 1996 - 2001 ஆட்சியின் போது கலைஞர் முதல்வராக இருந்தபோது சாதனைகளைக் குவித்தார். ஆனால் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடித்தனர். அதேபோல்தான் இன்றும். 2021 - 26 காலகட்டத்தில் ஸ்டாலின் சாதனைகளைக் குவித்தார். இன்று தோற்கடிக்கப்பட்டு இருக்கிறோம்.**

1957 முதல் 2026 வரை தி.மு.க. தேர்தல் களத்தில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து இருக்கிறது. வாக்கு சதவிகிதம் அதிகபட்சமாக 48.6 வரை பெற்று இருக்கிறது. அது ஆடாமல் அசையாமல் பயணித்துக் கொண்டு இருக்கிறது. புதுவெள்ளத்தில் மக்கள் நீராடுவதைப் போல சில ஏடுகள் செய்திகளின் மூலம் மக்களைக் குளிக்க வைக்கிறார்கள். தி.மு.க.வை இந்தத் தேர்தலில் வீழ்த்திவிட்டதைப் போலவும் தி.மு.க.வே சூன்யமாகிவிட்டதைப் போலவும் செய்திகளை வெளியிடுகிறார்கள். இது சரியா என்பதை யோசிக்க மறுக்கிறார்கள்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் ஒரு இடம் கூட இல்லாத காலம் இருந்தது நாடாளு மன்றத்தில் 39 இடங்கள், சட்டமன்றத்தில் 184 இடங்கள் இருந்த காலங்கள் உண்டு. கலைஞர் இங்கிருந்து கொண்டு தேசிய அரசியலையே கட்டமைத்தார். குடியரசுத் தலைவர்களையும் பிரதமர்களையும் உருவாக்கினார். தமிழ்நாட்டு அரசியல், தென்னக அரசியல் என்றும்



**க.திருநாவுக்கரசு**
*திராவிட இயக்க ஆய்வாளர்*

தி.மு.க.வின் கரங்களில்தான் இருக்கும். மத்தாப்பு அரசியல் இருட்டில் பளிச்சென்று இருக்கும். அதைப் பகலில் கொளுத்தினால் பார்த்து இரசிக்க முடியாது. இப்போதைய த.வெ.க. வெற்றி பகல் நேர மத்தாப்பு. இது போகப் போகத் தெரியும்.

**தி.மு.க.வின் அரசியல் என்பது அமைப்பு ரீதியானது. நிறுவன மயமானது. ஆவணமாய் குவிந்து இருப்பது. அதனுள்ளே கொள்கை படிமமாய் கிடக்கிறது. மத்தாப்பில் இதனைக் காணமுடியாது. கணநேரம் எரிந்து நின்றுபோகும். மத்தாப்பின் வெளிச்சத்தை டெல்லி இரசிக்கிறது. அவர்கள் இருட்டில் இருப்பதை அவர்களால் உணரமுடியவில்லை. தி.மு.க. ஆட்சியிலிருந்து போயிற்றா? - என்றே பார்க்கிறார்கள். அப்படியானால் நாம் - தி.மு.க.வினர் நமது கொள்கைகளில் எவ்வளவு கறாராக இருக்கிறோம் என்பதைத்தானே இது காட்டுகிறது.**

திராவிட இலட்சுமி என்கிற ஓர் அம்மா நமது இயக்கத்தின் மீதும் தி.மு.க.வின் மீதும் பற்றுள்ளவர். ‘Instagram’ இல் ஒரு செய்தியைத் தி.மு.க.வினருக்கு ஆறுதல் படுத்தி கூறுகிறார். அழுதுகொண்டே சொல்கிறார். அதன் கருத்தாவது:

“தலைவர் ஸ்டாலின் கடுமையாக உழைத்தார். பல சாதனைகளைப் புரிந்தார். சுற்றிச் சுற்றி வந்தார். ஓய்வே எடுப்பதில்லை. அவருக்கு 73 வயதாகிறது. பரவாயில்லை இப்போது ஓய்வு கொடுத்து இருக்கிறார்கள். நமக்குனு வேலைகள் இருக்கும். அதைப் பார்ப்போம். யாரும் அதைரியப்பட வேண்டாம். தைரியமா இருங்க.

அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடைமையடா”

என்று கழகத் தோழர்களை ஆறுதல் படுத்தி இருக்கிறார். இதை எமது மகள் மணிமேகலை எம்மிடம் காட்டினார். அப்படியே உருகிப் போனோம்.

அந்த அம்மையார் சொன்னது போல ‘நமக்குனு வேலைகள் இருக்கு’ அதை செய்வோம். **தி.மு.க. ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கம். ஆட்சியில் இருப்பது மட்டும் அதன் நோக்கம் அல்ல. அதுவன்றி, ‘வர்ணமற்ற, சாதிகளற்ற, தமிழியல் சார்ந்த, பகுத்தறிவு சமதர்ம சமுதாயம் உருவாக’ பாடுபடுவது நமது இலட்சியம். நமது அரசியல் பயணம் என்பது இதனை நோக்கியது தான். ஆகவே தி.மு.க.வின் அரசியல் அலைகள் ஓய்வதில்லை. இவை முன் கணநேர மத்தாப்புகள் என்ன செய்ய முடியும்?**

---

## பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில்

# வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு மு.அப்துல் வகாப் நன்றி!

நெல்லை.மே.7.

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளரும், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளருமான மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்ப தாவது.

பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில், இரண்டாவது முறை போட்டியிட வாய்ப்பு வழங்கிய எங்கள் நெஞ்சில் நிறைந்த கழகத் தலைவர் அவர்களுக்கும்,

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக களத்தில் நின்ற போது, என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து கட்சி நிர்வாகி களுக்கும், தொண்டர் களுக்கும், எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக உடன்பிறப்புகளுக்கும், ஆதரவு கேட்டு சென்ற நேரத்தில், திராவிட மாடல் அரசின் திறன்மிகு முதல்வர் தளபதி அவர்களின், சமூக நீதி, ஒருங்கிணைந்த வளர்ச்சி,

தொலைநோக்கு சிந்தனை, மகளிர் ஈடேற்றம், மாணவ, மாணவியரின் முன்னேற்றம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட நலத்திட்டங்களுக்கு அங்கீகாரமாக மலர்ந்த முகத்துடன் வரவேற்று அளவற்ற பாசத்தை பொழிந்து வாக்களித்து வெற்றி பெறச் செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில்

# தி.மு.க.விற்கு வாக்களித்த 64,426 வாக்காளர்களுக்கு நன்றி!

### நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.மே.7-

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான சு.சுப்பிரமணியன்

தனக்கு வாக்களித்த 64,426 வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்ப தாவது.

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக போட்டியிட முதல்முறையாக வாய்ப்பளித்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணை பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், நெல்லை மத்திய மாவட்ட கழகப் பொறுப்பாளர், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மு.பேச்சி பாண்டியன் ஆகியோர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த 64,426 வாக்காளர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அனைத்து மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகளுக்கும் மற்றும் சார்பு அணி நிர்வாகிகளுக்கும், கழகச் சொந்தங்களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும், தேர்தல் பணியை ஒருங்கிணைத்த தேர்தல் ஆணையத்தின் அலுவலர்கள், காவல்துறையினர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள், சமூகவலைதள செய்தியாளர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. போராடும்.!
தி.மு.க. வெல்லும் !

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

# பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மீண்டும் கழகத்தின் கோட்டை ஆனது!

### நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை தி.மு.க. வேட்பாளர் மு.அப்துல் வஹாப் வெற்றி! 13,805 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி!

நெல்லை.மே.7-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழகத்தின் கோட்டை என்று மீண்டும் நிரூபணம் ஆனது. நெல்லை மத்திய மாவட்டம் பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான மு.அப்துல் வஹாப் 2 வது முறையாக போட்டியிட்டு 13,805 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளராக

மு அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிவிக்கப் பட்டார். அதனைத் தொடர்ந்து வேட்பு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து பாளையங்கோட்டை தொகுதி முழுவதும் கொளுத்தும் வெயிலிலும், மாலைப் பொழுதிலும் வாக்காளர்களை சந்தித்து தீவிரமாக வாக்கு சேகரித்து வந்தார். கழக நிர்வாகிகளும் வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த 4 ம் தேதி பாளையங்கோட்டை அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இதில் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மு.அப்துல்வகாப் 13,805 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்கு விவரம் வருமாறு.

தி.மு.க.வேட்பாளர் மு. அப்துல்வகாப் பெற்ற வாக்கு 79,744, 2 வது த.வெ.க. வேட்பாளர் மரியஜான் 65,939 வாக்கு களும், 3 வது அ.தி.மு.க. வேட்பாளர்

சையது சுல்தான் சம்சுதீன் 19,732 வாக்கு பெற்றார். இதில் பாளையங்கோட்டை தி.மு.க. வேட்பாளர் மு.அப்துல் வகாப் 13,805 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தற்போது அவர் 2 வது முறையாக பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப் பட்டுள் ளார். அதாவது 2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பாளையங் கோட்டையில் மு.அப்துல் வஹாப் வெற்றி பெற்றார். பாளை தொகுதி மீண்டும் தி.மு.க. கைவசமானது. பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியை தி.மு.க. தொடர்ந்து 7 வது முறையாக கைப்பற்றியுள்ளது. மேலும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழகத்தின் கோட்டை என்றும் நிரூபணம் ஆகி உள்ளது. குறிப்பிடத்தக்கதாகும்.

பாளையங்கோட்டை தொகுதியில் வெற்றி பெற்ற நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.வை கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

---

## தமிழ்நாட்டில்

# 12 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, மே.7-

தமிழ்நாட்டில் இன்று மாலை 4 மணிக்குள் 12 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. கடலூர், மயிலாடுதுறை, நாகை, தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், செங்கல்பட்டு, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது. நாளை மறுநாள் 19 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

---

# அதானே...

